Registreed as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் ... National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி: எண் 4

மலர் 6 சோபகிருது மாசி 26 ஆம் நாள் ஷவ்வால் 23 (9 3 64) திங்கட்கிழமை இதழ் 28

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# வடபகுதிக்கு நீர்வீழ்ச்சி மின்சார விநியோகம்

## மாத்தளைக்கூடாக கொண்டுவர அரசாங்க அதிபர் முயற்சி?

நல்லூர், ஞாயிறு

**தென்னிலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சி மின்சாரத்தை வடபகுதிக்கு மாத்தளைக்கூடாகக் கொண்டுவர முயற்சிகள் எடுத்து வருவதாக வடபகுதி அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா சுன்னுகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.**

சுன்னுகம் மாதர்சங்கம் நிறுவியுள்ள நெசவுநிலையத் திறப்பு விழா திருமதி தவமணி மார்கண்டு தலைமையில் நடைபெற்றபோது அரசாங்க அதிபர் நெசவு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"வடபகுதியில் பல கைத்தொழில்கள் ஆரம்பிக்க மின்சார வசதிவேண்டும். குறைந்த செலவில் மின்சார வசதி கிடைத்தால்தான் ஆரம்பிக்கப்படும். தொழிற்சாலைகள் பெரும் லாபத்தைத் தரும் எனவே வடபகுதியில் பல புதிய தொழில் நிலையங்களை நிறுவி பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தி தென்னிலங்கையிலுள்ள நீர்வீழ்ச்சி மின்சாரத்தை வடபகுதிக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்து வருகிறேன். நீர்வீழ்ச்சி மின்சாரத்தை மாத்தளைக்கூடாக யாழ்ப்பாணம் கொண்டுவரின் யாழ்ப்பாண மக்களுக்கு குறைந்த செலவில் மின்சாரம் கிடைக்க வழி ஏற்படும். இதனால் அரசாங்கத்திற்கு பெரும் லாபம் கிடைக்கும்.

முன்னாள் செனட்டரும் சுன்னுகம் பட்டினசபைத் தலைவருமான திரு. பி. நாகலிங்கம், வலி.வடக்கு காரியாதிகாரி திரு. க. முருகேசம்பிள்ளை ஆகியோருட்படப் பலரும் பேசினர்.

## சிங்களத் தகுதி இருந்தால் வேலை

கொழும்பு, ஞாயிறு

இந்தமாத இறுதியில் பட்டப் பரீட்சைக்குத் தோற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் அளிக்க கல்வி இலாகா ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளதாகத்தெரிகிறது.

1963—64-ம் வருடகால எல்லைக்குள் மூன்று பல்கலைக் கழகத்திலுமிருந்து 3500 கலைப் பகுதி பட்டதாரிகளையும் விஞ்ஞானப்பட்டதாரிகளையும் ஆசிரியர்களாக நியமிப்பதென கல்வி இலாகா தீர்மானித்துள்ளது.

## ஆயிரத்துக்கு மதிகமான ஊழியருக்கு கட்டாய ஓய்வு

### சிங்களத்தில் தகுதி பெருத 'பழைய' ஊழியர் நிலை

கொழும்பு,ஞாயிறு

அரசங்க சேவையில் 1956-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம்திக்கு முன் சேர்ந்த ஊழியருக்கு கட்டாயஓய்வு பற்றிய சுற்றறிக்கைசெற வாரம் அனுப்பப்பட்டது. இச்சுற்றறிக்கைகள் இலாகாதலைவர்களால் அனுப்பப்பட்து

ஆயிரத்துக்கு மேற்பட்ட பழைய அரசாங்க ஊழியர் (1956-க்குமுன் சேர்ந்தவர்கள்) கட்டாயஓய்வு பெறவேண்டிவரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள தகுதி பெருததற்கு திருபதிகரமான காரணம்தெரிவிக்காத பழைய அரசாங்க ஊழியர் எல்லோரும்கட்டாய ஓய்வு பெறவேண்டிநேரும்,

சிங்கள தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் சிங்கள தகுதிபெற இருவருட அவகாசம் அளிக்கப்படும். சிங்கள தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் சிங்களத்தில் தகுதிபெற முயற்சித்தவர்கள் என்ற பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

சுகவீனம் அல்லது நாட்டில் இல்லாதிருந்தது .ஆகியவை மட்டுமே சிங்களத்தில் தேர்ச்சி பெற முயற்சிக்காததற்கு உரிய திருப்திகரமான விளக்கங்களாகக் கணிக்கப்படும்.

## பட்டினசபைத் தலைவர் மீது குற்றச்சாட்டு

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கத்தின்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும்படியும், அதைத் தொடர்ந்து அவரைத் தலைவர் பதவியிலிருந்து உடனடியாக விலக்கும்படியும் கோரி சபையின் உபதலைவர் திரு. சு. கிருபாமூர்த்தியும், 4-ம் வட்டார அங்கத்தவர் டாக்டர் சு. வே. சீனிவாசகமும் ஸ்தலஸ்தாபன அமைச்சரைக் கேட்டுள்ளனர். இவ்விரு அங்கத்தவர்களும் தலைவருக்கெதிராக மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் 25 குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

உருத்திரபுரம்

## கோயில் ஐயர் கொலை வழக்கு

### 18-ந் தேதி விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

உருத்திரபுரம் கோயில்ஐயர் கொலை வழக்கு யாழ்ப்பாணம் அசைஸ் நீதிமன்றத்தில், இம்மாதம் 18-ம் தேதி புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வழக்கில் உருத்திரபுரம் கோயில் ஐயர் காசிலிங்க சர்மாவைக் கொலைசெய்ததாக முத்தர் வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி பசுபதி, காலஞ்சென்ற காசிலிங்க சர்மாவின் மனைவி கோகிலாம்பாள் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

இம்மாதம் 16-ந் திகதி ஆரம்பமாகும் அசைஸ் நீதிமன்ற விசாரணைகள் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி முன்னிலையில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

பண்டாரநாயக்கா கொலை விசாரணை

## பகிரங்க விசாரணை புதனன்று ஆரம்பம்

### முதல்நாளன்று 7 பேர் பிரசன்னமாவர்

கொழும்பு, ஞாயிறு

காலஞ்சென்ற முன்னாள் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர் டி. பண்டாரநாயகாவின் கொலை சம்பந்தமான விசாரணைச்சபை எதிர்வரும் புதன்கிழமை முதல் தனது பகிரங்க விசாரணைகளை நடத்தும். பகிரங்க விசாரணைகள் சபையின் காரியாலயத்தில் புதன்கிழமை ஆரம்பமாகும்.

மூவர் கொண்ட இந்த விசாரணைச்சபையின் முன் 50 பேர் சாட்சியமளிப்பார்கள் என்றும் புதன்கிழமையன்று ஏழு சாட்சிகள் பிரசன்னமாயிருப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபுக் குடியரசு, கானா, இலங்கை நீதிபதிகளைக் கொண்ட இந்திய விசாரணைச் சபையின் தலைவராக நீதியரசர் திரு. டி. எஸ். பெர்னாண்டோ விருக்கிறார். கானா, ஐ. அ. கு. நீதிபதிகள் செவ்வாய்க் கிழமையன்று இலங்கை வந்து சேருவார்கள்.

பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலை சம்பந்தமான அரசியல் காரணங்கள் எதுவும் இருக்கிறதா என்பதுபற்றி கமிஷன் விசாரணை நடத்தும்.

## "சைவ சமயத்தவர்களில் பேதம் இருத்தல் கூடாது"

### சைவ குருமார் ஆண்டுவிழாவில் தியாகலிங்கம் கியூ. சி.

உரும்பராய், ஞாயிறு

"சைவசமயம் பழமையும் சிறப்பும் வாய்ந்தது. சமய முன்னேற்றத்திற்குச் சைவ சமயக் குருமார்களே வழிகாட்டிகள். சைவசமயக் குருமார்கள்தான் சைவாலயங்களின் காப்பாளர்கள். நமது சமயத்தில் உயர்வு தாழ்வு என்ற பேதம் இருத்தல் கூடாது. எல்லோரும ஓர் இனம் என்ற மனபபான்மை ஏற்படவேண்டும்" என்று திரு. செ தியாகலிங்கம் கியூ சி. அகில இலங்கைச் சைவக் குருமார்களின் 14-வது ஆண்டு மகாநாட்டைச் சைவாசார முறைப்படி திறந்து வைத்துப் பேசியபோது கூறினர். மகாநாட்டு நிகழ்ச்சிகள் உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோயில் தேவஸ்தானத்தில் நடைபெற்றன.

பரம்பரையைத் தழுவி நாதஸ்வர இசை முழங்க, எட்டுச்சுவடிகள் வீதிவலமாகக் கொண்டுசெல்லப்பட்டதையடுத்து வேதாகம விற்பன்னர் சிவஸ்ரீ கு பொன்னையக் குருக்கள், ஆலய முன்றிலில் வேதங்கள் மங்கல வாத்தியங்களுக்கிடையே இடபக் கொடியை ஏற்றுவைந்தார்.

நியாய சிரோமணி சுப்பிரமணிய சாத்திரிகளால் உபநிஷத பாராயணம் செய்யப்பட்டது. இசைவல்லார் செல்லத்துரை திருமுறை ஓதினர்.

மகாநாட்டுக்கு ஈழத்துச் சிதம்பரம் எனப் புகழப்படும் காரைநகர்ச் சிவன்கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரகுருக்கள் தலைமை தாங்கினர். "அரசன் பணி ஆலயப்பணி என்று பல பணிகளுண்டு. எல்லாப் பணிகளிலும் உயர்ந்தபணி ஈசன் பணி. நம்மையெல்லாம் ஆட்டிப் படைக்கும் சக்தியாயுள்ளவர். ஆண்டவர் ஒருவரே. குரு பரம்பரை சிறக்க வேண்டும் எதிர்காலக் குரு பரம்பரை சிறக்க உயர்ந்த சமயக்கல்லூரிகள் நமது நாட்டிலே தோன்றுவது மிகவும்

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய மகோற்சவ ஆரம்ப தினமான இன்று பகல் பதினொரு மணிக்கு பஞ்ச மூர்த்திகளுக்கு பூஜையும் பகல் பன்னிரண்டு முப்பதுக்கு கொடியேற்றமும் நடைபெறும். மாலை ஆறு மணிக்கு திரு. க. முருகேசு, தொண்டர்படையை ஆரம்பித்து சொற்பொழிவு நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து திரு வி. க. ஆறுமுகம், "சிவலோகக் காட்சி" எனும் பொருள் குறித்து கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

### மணிவாக்கு

பிறர்மீது குற்றம் சுமத்துவதைவிட்டு, நாம் நம் தவறை எப்போது உணர ஆரம்பிக்கின்றேமோ அப்போதே நமக்கு நல்லகாலமும் ஆரம்பமாகிவிடுகின்றது.

— பிராங்புக்மன்

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு மாசி ீ 26உ (9-3-64)

## பொதுஜன நன்மை

ஆஸ்பத்திரி டாக்டர்களும் நிபுணர்களும் இன்று மீண்டும் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். சென்ற 12 நாட்களாக அவர்கள் இல்லாததால் ஆஸ்பத்திரி சேவைகள் பெரிதும் ஸ்தம்பித்து பொதுமக்கள் பல இன்னல்களுக்கும் உள்ளாயினர். இப்போது ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் மீண்டும் வந்து சேவை செய்வது பொதுமக்களுக்குப் பெரிதும் ஆறுதலும் கஷ்ட நிவாரணமுமாகும்.

நிபுணர்கள சங்கத்தார் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, அவசரகாலப் பிரகடனம் தான் அவர்களை மீண்டும் வேலைக்குத் திரும்பும்படி செய்துளளது. தாங்கள் சட்டத்துக்கு மாறாக நடக்க விரும்பவில்லை என்றும் இதற்கிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்து தங்கள் குறைகள் நீங்குமென்று நம்புவதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். சட்டத்தை மீறாமலும் வீண்பிடிவாதம் செய்யாமலும் ஆஸ்பத்திரி டாக்டர்கள் வேலைக்குத் திரும்பத் தீர்மானித்தது விவேகமான செயலாகும்.

இதேசமயம் சுகாதார அமைச்சருக்கும், நிபுணர்கள் சங்கப்பிரதிநிதிகளுக்கும்பேச்சுகள் தொடர்ந்து நடக்கின்றன. நிபுணர்களுக்கும் நியாயமான சில குறைகளுண்டு. அவற்றைக் குறித்து தாராள மனப்பான்மையுடன் பேச்சுகள் நடத்தி, கூடுமானவரை அக்குறைகளை நீக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இதுவரை வேலைநிறுத்தம் செய்த டாக்டர்களுக்கும் அதுபற்றி மனநிம்மதியோ மகிழ்ச்சியோ இருந்திருக்க முடியாது. மீண்டும் சுயமதிப்பை இழக்காமல் வேலைக்குத்திரும்ப முடிந்ததுபற்றி அவர்களும் ஆறுதல் அடைந்திருக்கக் கூடும். எப்படியும் பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவையிலே ஈடுபட்டுள்ளவர்கள், எந்த நிலையிலும் வேலைநிறுத்தம் செய்வதை பொதுமக்கள் விரும்பமாட்டார்கள், இவ்வித வேலைநிறுத்தங்கள் பொதுமக்களின் நன்மைக்கு மாறானவையாகும். ஆகவே இவ்வித சேவைகளில் வேலைநிறுத்தம் ஏற்படாமல் தடுக்கத்தக்க பாதுகாப்பு முறைகளைச் செய்ய வேண்டும்.

பார்லிமெண்டரி ஜனநாயகத்திலே பொதுமக்களின் பிரதிநிதிகளைக் கொண்டே ஆட்சி நடத்தப்படுகிறதென்பது கோட்பாடு. எந்தக் கட்சியை சேர்ந்த எம். பி. யாயினும் அவர்கள் அனைவரும் பொதுமக்களுக்கு நன்மை செய்வதாக உறுதி கூறி அவர்களது ஆதரவு பெற்று பார்லிமெண்ட் சபையில் அங்கம் வகிக்கின்றார்கள். அவர்கள் எக்காரணம்பற்றியும் பொதுமக்களுக்குப் பாதகம் அளிக்கும்படியான காரியங்களை ஆதரிக்க முடியாது. டாக்டர்கள், இஞ்சினியர்கள் இவர்களது வேலைநிறுத்தங்களை இடதுசாரிகள் உள்ளிட்டு எந்தப் பார்லிமெண்ட் அங்கத்தினரும் ஆதரிக்கவில்லை. இதற்கு மாறாக இச்செயலைக் கண்டிப்பதாக பகிரங்கமாக அறிவித்தனர். கட்சிபேதமின்றி எல்லா எம். பி. க்களும் ஒருமுகமாக பொதுமக்களின் நலனில் அக்கறை காட்டியது வரவேற்கத்தக்கது.

இனி இவ்வித அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டவர்கள் பொதுமக்களின் நன்மைக்கு மாறான முறையில் எக்காரணம்பற்றியும் நடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதற்கான பொறுப்பு மக்களின் பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் உண்டு. பொதுமக்களின் நன்மையே மற்ற எதையும்விட அதிக முக்கியமாகும்.

---

## நல்ல சேவை

சென்றவாரம் யாழ்ப்பாணம் பண்ணையிலே வலது குறைந்தவர்களுக்காக ஓர் இல்லம் திறக்கப்பட்டுள்ளது நல்லதோர் தர்ம கைங்கரியமாகும். இதற்காக ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஞாபகார்த்த சபையினரைப் பாராட்டுகின்றேம்.

எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தையும் அந்நியரையும் நம்பி இராமல் நாமே நமக்கான உதவிகளைச் செய்து கொள்ளுவதுதான் மானமும் மரியாதையுமாகும். இந்த இல்லத்துக்குத் தேவையான பொருளை மக்கள் தாராளமாகக் கொடுக்க முன்வருவதாக திறப்புவிழாவின்போது காரியதரிசி அறிவித்தது மகிழ்ச்சியும் பெருமையும் படத்தக்கதாகும். நன்முயற்சிகளுக்கு இங்கு பொதுமக்களின் ஆதரவு அமோகமாக இருக்குமென்பது உறுதி.

இவ்வித ஸ்தாபனங்களுக்கு பணத்தைவிட, அன்புச் சேவையே அதிக முக்கியமாகும். சிறப்பாக நம் தாய்மார்கள் இவ்வித இல்லங்களுக்கு அடிக்கடி சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு தின்பண்டம் முதலியவைகளைக் கொடுத்து அன்பாகச் சில வார்த்தைகளைப் பேசி ஆறுதல் கூறுவது மிக மேலான சேவையாகும். பொருளும் அன்புச் சேவையும் சேரச்சேர, நமது சமூகக் குறைகள் நீங்கவும் நாம் நல்வாழ்வு வாழவும் முடியும்.

# தமிழ்மொழி மூலம் விஞ்ஞானம் போதிக்க முடியும்

— ஆர். என். குலசிங்கம் பி. எஸ்ஸி. —

தமிழ் மொழிக்கு எந்த அளவில் அங்கீகாரம் கிடைக்குமென்பது நம் தலைவர்களும் அரசியலாரும் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்னையாகும். ஆங்கிலத்தையும், தமிழையும் மாசறக் கற்கவேண்டிய நம மாணவர்கள் இன்று ஆங்கிலத்தையோ அன்றித் தமிழையோ சரியாகப் படியாமல் இரண்டுங்கெட்டான் நிலையிற் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் நாளுக்குநாள் மாற்றமடையும் கல்வித்திட்டம் என்றால் இதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆங்கிலம் இரண்டாவது மொழியாகிப் பின் மூன்றாவது மொழியாக மாறும் இந்நேரத்தில் நம் தமிழ்ப் பிள்ளைகளுக்கு விஞ்ஞான அறிவைத் தமிழில் வைத்துக் கொள்வதே புத்தியான செயலாகும் இன்று பாடசாலைகளில் உயர்வகுப்பு மாணவர்கட்குக் கூட விஞ்ஞானத்தை ஆங்கில மூலம் போதிக்கும் பொழுது முன்பு போலல்லாது தற்பொழுது அவர்கள் படும் அவஸ்தையும், அதற்குத் தமிழில் விளக்கம்கொடுக்கும் போது அவர்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியையும் பார்க்குமிடத்து நம் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் மொழி மூலம் விஞ்ஞானத்தைப் போதிப்பதே சரியான வழியாகும்.

சிங்கள மாணவர்களுக்குச் சிங்களத்தில் விஞ்ஞானம் கற்பிக்கப்படுகின்றதைக் கண்கூடாகக் கண்டும் நம்மவர் நம் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழில் விஞ்ஞானத்தைக் கற்பிக்கத் தயங்குவதுதான் விந்தை. தமிழ் மொழி தரம் குறைந்ததோ, கலைச்சொற்கள் அற்றதோ அல்லது விரிவுரைக்குப் பொருத்தமற்றதோ அல்ல.

நூற்றைம்பது வருடகாலம் ஆட்சியிலிருந்த அந்நியமொழி விலகிச் சுயமொழி நடைமுறைச் செயலுக்கு வருகின்றபொழுது பல கஷ்டங்கள் தோன்றுவது சர்வசாதாரணமான விஷயம். இப்படியான சில கஷ்டங்களுக்குப் பயந்து விஞ்ஞானத்தைத் தமிழ் மொழி மூலம் கற்பிக்கமுடியாது என்று கூறுபவர்களைப் பார்த்து உண்மையிலேயே நாம் வெட்கப்படவேண்டும். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்தகுடி"யினது மொழி தமிழ் மொழி வரலாற்றிலேயே தமிழ்மொழி தோன்றியது எப்போது என்று சொல்ல முடியாமலிருக்கிறது. இப்படியான பண்பட்ட ஒரு மொழியை இன்று இருக்கும் அரசாங்கம் அல்லது வேறு எந்த அரசாங்கமும் அழித்துவிட முடியாது. தமிழ்மொழி தமிழன் பிறந்தபோது அவனுடன் கூடப்பிறந்தது. அந்நிய மொழிக்கு அடிமையாகாமலிருக்கு மட்டும், வீட்டிலே மனைவி மக்களுடன் பேசும் வரையும், தனது அன்றாட அலுவல்களையெல்லாம் செய்யும் வரையும் சுயமொழி வளர்ச்சியுறுமேயொழியத் தளர்ச்சியுறாது என்பது வெள்ளிடைமலை. அவ்வாறு தம் மொழி அழிந்துவிடும் எனப் பயப்படுகின்றவர்கள் கூடத் தம் பிள்ளைகளுக்குத் தமிழ மொழியில் விஞ்ஞானம் போதிக்கத் தயங்குவதும், ஆங்கிலத்தில்தான் போதிக்க முடியுமென வாதிடுவதும் தான் எமக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

அந்நிய மொழியான ஆங்கிலத்தைவிடத் தாய்மொழி மூலம்தான் ஒரு பிள்ளை அரிய விஞ்ஞானக் கருத்துக்களை இலகுவில் கிரகிக்க முடிகிறது என்பது அறிஞர் கண்ட முடிவு. எவ்வளவோ இன்னல்கட்கிடையிலும் நம் அரசகரும மொழி அலுவலகத்தினர் விஞ்ஞானத்தில் ஆங்கிலத்திலுள்ள சொற்களுக்கு ஏற்ற தமிழ் கலைச் சொற்களை ஆக்கிவருகின்றனர். அழகிய கலைச்சொற்கள் நம் தமிழ் மொழியிலிருக்கும்போது நாம இன்னும் ஆங்கிலத்தில் விஞ்ஞானத்தை நீடிப்பது உமிக்குற்றிக் கைக வருந்தியதுபோலாகும். கம்பனையும், வள்ளுவனையும்; இளங்கோவையும், பாரதியையும் பற்றிப் பழம் பெருமை பேசுகின்ற நாம் ஏன் இதுவரையும்அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றவில்லை? பாரதி கூறியதுபோல், "மேலைக்கலைகள் மெத்த வளருது மேற்கே—இந்த மேன்மை தமிழினிற்கில்லை, மெல்லத் தமிழினிச்சாகும்" என்ற இந்த வசையைப் போக்க நாம் முன்வரவேண்டும். ஆங்கிலத்திற்றான் விஞ்ஞானம் போதிக்கமுடியும்; தமிழில் எப்படி முடியும்? ஆங்கிலம உலகப் பொது மொழியாயிற்றே? என்று வாதிக்கின்றனர். சிலர் படித்தும் படியாதவர்களைப் போல்! தமிழ் மொழியைத் தமிழர் போற்றித் தன்மானங்காக்க வேண்டியிருக்க, தமிழ்மொழி குறைந்ததென்று கூசாமல் கூறுகின்றனர். பாரதிகண்ட கனவை நனவாக்க, அவன் கண்ட சமுதாயத்தை உருவாக்க நாம் ஏன் தயங்கவேண்டும்? இந்தக் கணமே நம்தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் மொழிமூலம் விஞ்ஞானம் போதிக்கத் தயாராகவேண்டும்.

சிங்கள மக்கள் விழிப்புக்கொண்ட விதத்தை அறிந்தும், இரவுபகலாகத் தம்மினத்தின் வாழ்விற்காக கங்கணங்கட்டி நிற்பதைத் தெரிந்தும், பெருந்தொகையான சிங்களப் புத்தகங்கள் மொழிபெயர்ப்பாகி வருவது கண்டும் விஞ்ஞானப் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்க்க நாம் செய்தது என்ன? சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

அழகு தமிழில் அருமையான சொற்களிருக்க, எமக்கேற்ற விளக்கம் இந்த மொழியிலிருக்க ஏன் நாம் அன்னிய மொழிக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்? விஞ்ஞானக் கல்வியில் அறிவைவளர்க்க ஆங்கிலம் அவசியமென்பது உண்மைதான். அதற்குத்தானே அது இரண்டாவது பாஷையாக இருக்கிறது. அரிச்சுவடியிலிருந்து சிரேஷ்ட வகுப்புவரையும் சுமார் ஒன்பது வருடங்கள் அதை ஒரு பாடமாய்ப் படித்து அறிவைப் பெறமுடியாதா?

ஆங்கிலத்திற்ரு விஞ்ஞானம் படிக்க முடியுமென்பது தவறு மின்னென முன்னேறிய விஞ்ஞான நாடுகளும், சண்டங்காய் நாடுகளைச் சுக்கு நூறாக்க நினைக்கும் அணுகுண்டு நாடுகளும் ஆங்கிலத்திற்றாே தம் விஞ்ஞான அறிவைப் பெறுகின்றனர்? ருசியாவின் ருசிய மொழியில்தான் விஞ்ஞானம் வளர்கிறது.

பலமொழி பயிலுந் திறன் தமிழனுக்கு இயற்கையளித்த வரம். இலங்கைத் தமிழர் சிலர் ருசியாவில் ஆறுமாதங்களில் ருசிய மொழியைக் கற்று அதன்பின் பொறியியல் அறிவை அந்த மொழியிலேயே பெற்றுவருவது பற்றி அறிகிறேம்; மகிழ்கிறேம். ஆனல் அதே தமிழர் விஞ்ஞானக் கல்வியைத் தமிழில் ஆக்குவதற்கும் பின்னிற்கிறார்கள். விஞ்ஞானத்தின் பயன்களை நம் பிள்ளைகளுக்கு ஆங்கிலத்திற் போதிப்பதைவிடத் தமிழிற் போதிப்பதுதான் சரியான வழியாகும்.

ஆங்கிலத்தின் தராதரம் வீழ்ச்சியடைந்து வரும் இந்நாளில நம் தமிழ்ப்பிள்ளைகளுக்குத் தமிழிலேயே விஞ்ஞானம் போதிக்கப்படவேண்டும். இன்றேல் அவர்கள் இரண்டும் கெட்டான் நிலையில் விழிக்க வேண்டி வரும். ஆங்கிலத்திற்றான் முடியும், தமிழால் முடியாது என்ற இந்த எண்ணம் ஓர் இனத்தையே படுகுழியில் தள்ளலாம். எனவே முன் எச்சரிக்கையாக விஞ்ஞானத்தை தமிழில் வைக்குவித்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

## ஐயாறன் எழுதுவது

இங்கு ரயிலிலும், பஸ்ஸிலும் "குருமாருக்கு" என்று எழுதி தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறேம். இந்த ஒழுங்கு இந்திய ரயில் வேக்களிலோ, பஸ்களிலோ கிடையாது. மதகுருமாரை விசேஷமாக மதித்து அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கு இது ஓர் அடையாளமாகும்.

ரயிலிலும் பஸ்ஸிலும் பௌத்த - கிறிஸ்தவ குருமார்களுக்கே இந்த மரியாதை சாதாரணமாகக் கிடைப்பதாயும், சைவசமய குருவென்றால், அந்த இடத்தில் உட்கார்ந்திருக்கும் சைவர்கூட ஒதுங்கி இடமளிப்பதில்லை என்றும், சைவ குரு ஒருவர் மிக மனத்தாங்கலுடன் தெரிவித்தார். சைவர்களே தங்கள் குருமார்களை மதிக்காவிட்டால் மற்றவர்கள் எப்படி அவர்களை மதித்து மரியாதை செலுத்துவர்?

* * *

உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோவில் மண்டபத்திலே சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அகில இலங்கை சைவசமயக் குருக்கள்மார்சபையின் 14 வது ஆண்டு மகாநாடு நடைபெற்றது.

அச்சபையினர் பொதுவாக சைவ நன்மக்களுக்கு வெளியிட்டுள்ள உருக்கமான ஒரு வேண்டுகோளில்,

"ஈசன் பூசையைக் குலத்தின் கடமையாகக் கொண்டொழுகியதுடன் நின்றுவிடாமல்,எம் மரபினர், நாட்டுக்கும், சைவ சித்தாந்த வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் தம்மாலியன்றவாறு பலவகையான தொண்டுகளைப் புரிந்துவந்திருக்கின்றனர். திருத்தொண்டத்தொகையை அருளி பெரிய புராணம் தோன்றுவதற்கே காரணமாக இருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும், நம்பியாண்டார்நம்பியும் நம் மரபினரே. நம்மரபில் பெருமக்கள் தோன்றிப் பத்திமான்களாக விளங்கியதோடு பிறரையும் பத்திமான்களாகச் செய்திருக்கின்றார்கள். இன்று பலர் ஓதிவரும் அபிராமியந்தாதி பாடிய பெரியாரும் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தரும் நம் அர்ச்சகர் மரபில் தோன்றியவர்களே.

"எனவே எங்களின் சைவ சமயக் குருக்கள்மார் சமூகம் முன்னேற ஆவன செய்து ஆதரிக்கும்வண்ணம் பொதுவாக சைவ நன்மக்களை அன்புடன் வேண்டுகின்றேம்" என்று கேட்டுள்ளார்கள்.

* * *

அம்மகாநாட்டில் பேசிய அன்பரொருவர், சைவக் குருக்கள்மார்கள் தங்கள் ஆசார அனுஷ்டானப்படி நடப்பின் அவர்களுக்குரிய மரியாதை கிடைத்து அவர்கள் மேலாக மதிக்கப்படலாமென்றாராம்.

ஆனல் சென்ற 450 வருட அந்நிய ஆட்சியிலே இவர்கள் எப்படி இங்கு அடக்கி, ஒடுக்கி, நசுக்கி ஒதுக்கப்பட்டனரென்பதை சரித்திரம் கூறும். இந்த ஆபத்துக்களுக்கெல்லாம் தப்பி, இவர்கள் இன்னும் இருந்துவருகின்றனராயின அது தெய்வாதீனமேயாகும்.

சாதாரணமாக ஏழைகளாகிய இம்மக்களுக்கு, இறைவன் ஏராளமான குழந்தை குட்டிகளையும் கொடுத்துவிடுகின்றார். சொற்ப வருமானத்திலே அவர்கள் இக்காலத்தில் குடும்ப காலட்சேபம் நடத்துவது எவ்வளவு கஷ்டம் என்

(4-ம் பக்கம் பார்க்க)

# "பாக். நடவடிக்கை அபாயமான நிலையை ஏற்படுத்தியுள்ளது"

## திரு. லால்பகதூர் சாஸ்திரி அறிவிப்பு

### அகதிகள் தொடர்ந்து வெளியேற்றம்

கான்பூர், மார்ச் 8

எல்லையில் யுத்த ஆபத்தம் போன்ற பாகிஸ்தானின் நடவடிக்கைகளும், சிறுபான்மையினர் வெளியேற்றமும் அபாயமும் கொந்தளிப்புமான நிலைமையை ஏற்படுத்தியிருப்பதாக திரு. லால்பகதூர்சாஸ்திரி இங்கு கூறினர்.

1962-ம் ஆண்டு சீனர் நடத்திய தாக்குதலின்போது எவ்வளவு அபாயநிலை இருந்ததோ, அதேபோன்ற நிலை இப்போதும் இருந்து வருகிறதென திரு. சாஸ்திரி கூறினர்.

பாகிஸ்தானிலிருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் வெளியேறிவருவதும், எல்லைகளில் நடைபெறும் துப்பாக்கிப்பிரயோகங்களும் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் மட்டும் பொறுத்த விஷயமல்லவென்றும் இது பெரிய பிரச்னையென்றும் திரு. சாஸ்திரி தெரிவித்தார். எனினும் மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

பாகிஸ்தானிலிருந்து சிறுபான்மையினர் வெளியேறுவதற்கு இந்தியா ஊக்கமளித்து வருவதாக பாகிஸ்தான் தெரிவிக்கும் குற்றச்சாட்டை ராய்பூரில் அகதிகள் புனர்வாழ்விப்பு மந்திரி திரு. மேஹர் சந்த்கன்ன மறுத்தார்.

பாகிஸ்தானில் நடைபெறும் கொடுமைகளைப் பொறுக்க முடியாமலே சிறுபான்மையினர் அங்கிருந்து வருவதாக திரு. கன்ன கூறினர்.

பிரிவினைக்குப்பின் இந்தியா வந்த 90 லட்சம் அகதிகளுக்குப் புனர்வாழ்வளிக்க 800 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாய் அவர் மேலும் கூறினர்.

சிறுபான்மையினர் பற்றிய நேரு-லியாகத்அலிகான் ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறியுள்ளதென்றும் ஆனல் இந்தியா அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாயும் திரு. கன்ன நிருபர்களிடம் கூறினர்.

"பாகிஸ்தானில் சிறுபான்மையினரின் உயிருக்கும் கௌரவத்திற்கும் பாதுகாப்பு இல்லை" என்று கூறிய அவர் பரஸ்பரம் சிறுபான்மையினர் பரிவர்த்தனை இதற்கும் பரிகாரம் ஆகாது என்றும் கூறினர்.

இந்தியாவுக்குள் சட்டவிரோதமாகப் புகுந்துள்ள பாகிஸ்தானியர்களை அந்த நாடு ஏற்க வேண்டும் என்றும் கன்ன தெரிவித்தார்.

இதற்கிடையில் நேற்று கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 830 அகதிகள் மேற்கு வங்காளத்திற்கு வந்திருக்கின்றனர். மற்றும் 100 பேர் வேறுபகுதிகள் வழியாக வந்திருக்கின்றனர். இவர்கள் தண்டகாரண்யத்திற்கு அனுப்பப்படுவார்கள் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் நேற்று கல்கத்தாவில் கூடிய கிறிஸ்தவத் தலைவர்கள் பாகிஸ்தானிலிருந்து வெளியேறும் சிறுபான்மையினர்பற்றி ஐ. நா. மனித உரிமை துணை கமிட்டிக்கு அறிவித்திருக்கின்றனர்.

## பாதுகாப்புசபை கூட இந்தியா எதிர்ப்பு

புதுடில்லி, மார்ச். 6

காஷ்மீர் சம்பந்தமாக மீண்டும் ஐ. நா. பாதுகாப்பு சபையைக் கூட்டவேண்டியதற்கு எவ்வித நியாயமும் இல்லை என, இந்தியா அறிவித்திருக்கிறது. தற்போதைய இந்திய பார்லிமெண்டின் பட்ஜட் விவாதம் முடிவடையும் வரை அத்தகைய விவாதம் ஒன்றில் இந்தியா கலந்து கொள்ள முடியாதென்றும் பாதுகாப்பு சபைத்தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## பாகிஸ்தானுக்கு ஆயுதசப்ளை

### சக்ளா கண்டனம்

புதுடில்லி, மார்ச். 8

பாகிஸ்தானுக்கு ஆயுத சப்ளை செய்வதால் ஏற்படும் தீமைபற்றி அமெரிக்கா உணர்ந்து பார்க்க வேண்டும் என கல்வி மந்திரி திரு. சக்ளா கேட்டுக்கொண்டார். சீனவுக்கு எதிராகவே ஆயுத சப்ளை செய்யப்படுவதாக அமெரிக்கா கூறிவந்தபோதிலும் எவர்மீதும் பிரயோகிக்க தயங்கமாட்டோம் என அயூப்கான் கூறியுள்ளதை கவனிக்க வேண்டும் என்றும் அவர் கூறினர்.

## 'வர்த்தக ஒப்பந்தம் செய்யத்தயார்'

வாஷிங்டன், மார்ச். 6

ரஷ்யாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள அமெரிக்கா தயாராய் இருப்பதாக ஜனதிபதி ஜோன்ஸன் அறிவித்திருக்கிஞர்.

## மகாராஜா காலமானர்

சென்னை, மார்ச். 8

79 வயதான பீதாபுரம் மகாராஜா கடந்த வெள்ளிக்கிழமை காலமானர்.

## ஹிந்தியில் பாரதியார் பாடல்கள்

புதுடில்லி, மார்ச் 7

மகா கவி பாரதியாரின் கவிதைகளை ஹிந்தியில் மொழிபெயர்த்து வெளியிட இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னக மொழிகளில் பாரதியாரின் பாடல்கள் ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

## உலக நீதி மன்றத்துக்கு போர்னியோ பிரச்னை

### பிலிப்பைன்ஸ் உரிமை கோரி நடவடிக்கை எடுக்கும்?

மணிலா, மார்ச் 8

வடபோர்னியோ மீது பிலிப்பைன்சுக்குள்ள உரிமைபற்றிய தாவாவை இன்னும் சில தினங்களில் பிலிப்பைன்ஸ் உலக நீதிமன்றத்துக்கு எடுத்துச் சொல்லும் என பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு மந்திரி கூறினர்.

மலேஷியா பற்றி நேற்று பிரதமர் துங்குஅப்துல் ரஹ்மான் பேசுகையில் யுத்தத்தைத்தவிர்க்கவே தாம் விரும்புவதாயும் ஆனல் தாக்கப்பட்டால் மலேஷியாவும் தாக்கும் என்றும் கூறினர்.

ஜாகர்த்தாவில் ராணுவ சிவில் அதிகாரிகள் அடங்கிய ஒரு கூட்டத்தில் ஜனதிபதி சுகர்ணே மலேஷியாவை ஒழிப்பதற்குத் தாக்குதலே சிறந்த வழி எனக் கூறினர்.

இதற்கிடையில் நேற்று 120 இந்தோனேஷிய கெரில்லாக்கள் போர்னியோவுக்குள் ஊடுருவியதாயும் இதில் 31 பேர் கொல்லப்பட்டனர். என்றும் 30 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## முதன் மந்திரி கண்டனம்

சென்னை, மார்ச். 8

தி. மு. கழகம் நடத்தும் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் கண்டித்தார்.

## இலங்கைக்கு இந்தியா குறிப்பு

புதுடில்லி, மார்ச். 8

இலங்கை ரத்மலானை விமான நிலயத்தில் இறங்கிய இந்திய விமானிகளைக் காவலில் வைத்தது குறித்து இந்தியா ஏமாற்றம் அடைந்திருப்பதாக புதுடில்லியிலு இலங்கை ஹைகமிஷனரிடம் கொடுக்கப்பட்ட குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

விமானத்தில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாகவே அது இறங்கவேண்டியிருந்ததென்றும் இக்குறிப்பில் கூறப்பட்டுளளது. இலங்கை தெரிவித்த ஆட்சேபனைக்கு பதிலளிக்கும் முகமாகவே இக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

## சைப்ரஸ்

நிக்கோஸியா, மார்ச். 8

சைப்ரஸில் கிரேக்கர்கள் வசமிருந்த 49 துருக்கியர்கள் விடுவிக்கப் பட்டனர். திரு மக்காரியோஸின் உத்தரவுப்படி இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சைப்ரஸில் சர்வதேசப்படை ஒன்றை அமைப்பதற்கு நிதி உதவி புரியும்படி யுதாண்ட் அங்கத்துவ நாடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிஞர்.

வசாவிளான்

## இரட்டைக் கொலை வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

வசாவிளானில் நடைபெற்ற இரட்டைக் கொலை சம்பந்தமாக மேல் விசாரணை சென்ற வியாழக்கிழமை மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எச். எஸ். அத்துருபாரு முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கொலை சம்பந்தமாக விசாரணை நடத்திய காங்கேசன் துறைப் பொலிஸைச் சேர்ந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் கோர்ட்டில் பிரசன்னமாயிருக்காததால் நீதிபதி விசாரணையை ஒத்திவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. நீதிபதி விசாரணையை 17ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இக்கொலை சம்பந்தமாகக் கணபதி கந்தையா, கணபதி நடேசன், மாணிக்கம் சின்னட்டி, சின்னட்டி நாகராசா, கதிரன் இரத்தினம் ஆகிய ஐவரும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்கள். இதில் கடைசி மூவர்மட்டும் கோர்ட்டில் ஆஜராயிருந்தார்கள். முதல் இருவரும் ஆஸ்பத்திரியில் இருக்கிருர்கள். சென்ற மாதம் 19ம் திகதி வசாவிளானைச் சேர்ந்த சீனியன் பாறி, வயிரவன் இராசன் ஆகிய இருவரும் கொலை செய்யப்பட்டார்கள். சந்தேக நபர்கள் சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானர்.

## மகாநாட்டிற்கு செல்ல அனுமதியில்லை

கொழும்பு, ஞாயிறு

நீலகிரியில் நடைபெற விருக்கும் ஒரு மகாநாட்டிற்கு, இலங்கையிலிருந்து லயன்ஸ் கிளப் பிரதிநிதிகள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

நீலகிரியில் உள்ள ஸ்தாபனம், இலங்கை பிரதிநிதிகளின் எல்லா செலவுகளையும் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்திருப்பதாக லயன்ஸ் கிளப் மந்திரியிடம் எடுத்துக் கூறியது. அப்படியிருந்தும் அனுமதிவழங்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது ஏற்கனவே லயன்ஸ் கிளப், ஏயர் சிலோனுடன், இந்தியாவிற்கு 25 பேர் செல்வதற்கு ரூபா 6,500 செலவில் ஒழுங்கு செய்திருந்தது. பிரயாணம் தடைப்பட்டதால் விமானம் காலியாகவே இந்தியா செல்லும்.

## இனத்துவேஷம் விவாதிக்கப்படும்

நியுயோர்க், மார்ச் 7

இனத்துவேஷம் சம்பந்தான ஐ. நா. விசேஷ சபை வரும் திங்கட்கிழமை கூடும்போது தென் ஆபிரிக்காவில் இடம் பெற்றுவரும் சமீபத்திய மோசமான இனத்துவேஷ நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## யுதாண்ட் தாயகம் செல்லமாட்டார்

நியுயோர்க், மார்ச் 7

சமீபத்தில் தமது தாயகமான பர்மாவுக்குச்செல்வதாக விருந்த ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் அங்கு செல்லமாட்டாரென இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

சைப்பிரஸ் சம்பந்தமாகவும் இதர பிரச்னைகள் சம்பந்தமாகவும் அவர் ஐ. நா. விலிருப்பது அவசியமாகவுள்ளதாலேயே அவரது பர்மா விஜயம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

## 'காசம் உலகை நாசப்படுத்துகிறது'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஜெனிவாவில் கூடிய உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிர்வாகசபை, முன்னேற்றமடைந்துவரும் நாடுகளிலுள்ள 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 70 சத விதத்தினர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது" என இலங்கை காசநோய் நிவாரணச் சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய சமூகஜோதி கேட்முதலியார் சி. தியாகராஜா கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

காசநோய் இன்றும் உலக நாசத்துக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கிறது. ஜெனிவாவில் கூடிய சுகாதார ஸ்தாபனத்தின் நிர்வாகசபையினர் உலகில் ஒருகோடி முதல் இருகோடி வரையானவர்கள் காச நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். இந்த நோயைத் தடுக்க எத்தனையோ வகையான மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தும் நிலைமை இன்னும் திருந்தியபாடாகவில்லை.

நாட்டிலுள்ள மக்களின் சுகாதாரத்தைப் பேணுவது அரசாங்கத்தின் கடமை. இலங்கை காசநோய் நிவாரண சங்கம் இத்துறையில் அரசாங்கத்துக்கு உதவ முன்னிற்கிறது."

காசநோய் நிவாரண சங்க அங்கத்தவர்களின் தொகை அதிகரிக்க வேண்டுமென்றும் திரு தியாகராஜா வேண்டுகோள் விடுத்தார்.

டாக்டர் எச். பி. செல்லையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முதலியார் சின்னத்தம்பி, திரு. டபிளயு. என். தேவசகாயம் ஆகியோரும் பேசினர்.

## இந்து முற்போக்கு வாலிபர் கூட்டம்

சங்கானை, ஞாயிறு

சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் சங்கத்தின் நடப்பு வருட தீர்மானங்களில் ஒன்ருகிய 'சிரமதான இயக்கம்' என்னும் பொருள்பற்றிப் பேசிய தலைவர் திரு. கா. சுந்தரலிங்கம் தமது தலைமையுரையில் நமது கிராமம், மற்றும் பல்வேறு கிராமங்களிலும் பார்க்க மிகவும் தரம் குறைந்ததாகக் காணப்படுகின்றது ஆகவே நாம் அக்குறைகளிலிருந்து விடுதலையடையவேண்டுமாயின் நமது வாலிபர்கள் சிரமதானத்தின் மூலமும் நமது பட்டின சபையின் ஒத்துழைப்புடனுமே முன்னேற முடியும் எனறும் கூறினர்.

வேலையில்லாத் திண்டாட்டத்துக்குள்ளாகியிருக்கும் எண்ணற்ற வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வேண்டுமாயின் நமது பட்டின சபை நமக்கு போதிய மின்சார வசதியையும் தந்துதவ வேண்டுமென்று கூறினர்.

## பிரிவுபசாரம்

பளை, வெள்ளி

தர்மக்கேணி தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியையாகக் கடமையாற்றிவந்த செல்வி த. சோதீஸ்மதி இம்மாத முற்பகுதியில் பூநகரியைச் சேர்ந்த அத்தாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# ஏப்ரல் 10-ல் தியாகையர் இசை மகோற்சவம்

## அகில இலங்கை இசையாசிரியர் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை இசையாசிரியர் சங்ககூட்டம் நாவலர் பாடசாலையில் சங்கீதபூஷணம் திரு. சே. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் தியாகையர் இசை மஹோற்சவத்தை ஏப்ரல் 10-ம் திகதி முதல் 12-ம் திகதிவரை நடத்துவதென அச்சமயம் தீர்மானிக்கப்பட்டது.

உற்சவக் கமிட்டியில் தலைவராக ஸ்ரீமதி சரஸ்வதி வேலாயுதபிள்ளையும் இணைச்காரியதரிசிகளாக திரு. எஸ். விநாசித்தம்பி, திரு. எஸ். வைத்தீஸ்வரஐயர் ஆகியோரும் பொருளாளர்களாக திரு. சே. வேலாயுதபிள்ளை, திரு. ஏ. சோமசுந்தரம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாண்டிலிருந்து இசையாசிரிய சங்கம் வருடாவருடம் இளம் பாடகர்களுக்குள் திறமைவாய்ந்த இசையாசிரியர்கட்கு சங்கீதகலாமணிப்பட்டத்தையும், 15 வருடங்களுக்கு மேலாக இசையாசிரியசேவை செய்து சிறந்த சங்கீதஞான அநுபவத்தைப்பெற்ற இசையாசிரியர்கட்கு "சங்கீதகலாரத்தினம்" என்ற பட்டத்தையும், இசையாசிரிய சங்கத் தலைவராக வருடாவருடம் தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு "சங்கீதகலாநிதி" என்ற பட்டத்தையும், இசையாசிரியசங்கத்தில் அங்கத்துவம் வகிக்க முடியாத மற்றும் பெரும் இசைவித்துவான்கட்கு "சங்கீதவித்வபூஷணம்" என்ற பட்டத்தையுமளித்துக் கொரவிக்கும்.

இந்நான்கு பட்டங்களுக்கும் அருகதையுடையவர்களை இசையாசிரிசங்க விசேஷ கமிட்டி தலைமைப்பீடம் வருடாவருடந் தேர்ந்தெடுக்கும்.

இலங்கை வானொலி தமிழ் சங்கீதப்பகுதி "ஆடிஷன் போர்ட்" மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் வடக்கு கிழக்கு மகாணங்களிலுள்ள இசைச்சங்கங்களது பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு "புதிய ஆடிஷன்போர்ட்" உருவாக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வேலையற்ற இசைத்தராதரமுடையவர்கட்கு உடனடியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நியமனம் அவரவர் தராதரத்திற்குரிய சம்பள விகிதத்தில் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## ஆசிரியர்கள் பகிஷ்கரிப்பு

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவு புனித அன்னம்மா பாடசாலைத் தலைமை ஆசிரியர் வரவு இடாப்புக்களை சரியாகக் குறிப்பதில்லை எனவும் வரவு இடாப்புக்கள் ஆசிரியர்களின் பார்வைக்குக் கொடுபபடுவதில்லை எனவும் ஆட்சேபித்து மேற்படி பாடசாலையின் ஏனைய நான்கு ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்லாது பகிஷ்கரித்து வருகின்றனர். இதனால் சுமார் 3 நாட்களாக மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நான்கு வருடங்களாக நடாத்தப்பட்டுவரும் இப்பாடசாலை ஒரு வருடத்துக்குமுன் அரசாங்கம் பொறுப்பேற்றும் இன்றுவரை புதிய ஆசிரியர் நியமனம் நடைபெறவில்லை எனத்தெரிகிறது. சுமார் 100க்கு மேற்பட்டமாணவர்கள் இங்கு கல்விபயில்கின்றார்கள்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிலி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்

## இன்ஸ்பெக்டர் வாராததால் விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

ஏழாலையைச் சேர்ந்தவர்களான ஐயா எனஅழைக்கப்படும் ஆறுமுகம் சின்னத்துரை, செல்லக்குட்டி செல்வநாயகம், வேலுப்பிள்ளை செல்லக்குட்டி ஆகிய மூவரும் குப்புளாவளைச் சேர்ந்த வீரசிங்கம் சுப்பிரமணியம் என்பவரை சென்ற ஜனவரி மாதம் 15-ம் திகதி கொலை செய்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு சென்ற வியாழக்கிழமை மல்லாகம் நீதிபதி திரு ஜி. எச். எஸ். அத்துருபாரு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை நடத்தவேண்டிய இன்ஸ்பெக்டர் திரு. மூர்த்தி இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் கோர்ட்டிற்கு ஆஜராக முடியாதிருப்பதாக வழக்கை வேறோர் திகதிக்கு ஒத்திவைக்கும்படி சப் இன்ஸ்பெக்டர் தியாகராசா நீதிபதியைக் கேட்டார். நீதிபதி அதனை ஏற்றுக்கொண்டு வழக்கை இம்மாதம் 13-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். முதலாம் எதிரிதரப்பில் திரு. ஆர். யே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். 2-ம், 3-ம் எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானார்.

## தற்கொலை

சுழிபுரம், ஞாயிறு

திருமணம் செய்து கொடுக்காததால் மாதகல் தெற்கு வாசியாகிய சிற்றம்பலம் வேலுப்பிள்ளை என்பவர் (22) நச்சுத் திராவகம் அருந்தி மரணமடைந்தார் என அறிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். நடராசா விசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

## சைக்கிள் திருட்டு

செட்டிகுளம், ஞாயிறு

முகத்தாங்குளம் வாசியான சுப்பிரமணியம் வைத்தியநாதன் என்பவருக்குச் சொந்தமான சயிக்கிள் அவரது இல்லத்தில் இருந்து களவாடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதுகுறித்து இவ்வூர் கிராமசேவகரும் பொலிஸாரும் புலன்விசாரணைசெய்து வருகிறார்கள்.

## மகாசிவராத்திரி விழா

கைதடி, ஞாயிறு

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க மகாசிவராத்திரி விழாவை வழக்கத்திலும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. நல்லூர் செல்லப்பா ஆச்சிரம பஜனைக் கோஷ்டியினரின் பஜனையும், திரு. எஸ். கணேசசுந்தரம், ஆசிரியமணி எஸ் சரவணமுத்து ஆகியோரின் கதாப்பிரசங்கங்களும் இடம் பெறும். அத்துடன் விநாயகப் பெருமானுக்கு விசேட பூஜை அபிசேகங்களும் நடைபெறும். அன்று யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய திரு. ஆ. பொன்னையா தலைமையில் பஜனை கோஷ்டியொன்று கைதடி வைரவர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு பிள்ளையார் ஆலயத்தையடையும்.

## இடமாற்றம்

பளை, ஞாயிறு

கடந்த 3 வருட காலமாகப் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் கடமையாற்றிவந்த காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை இம்மாத நடுப்பகுதியில் தென்மராட்சியைச் சேர்ந்த சாவகச்சேரிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருடைய இடத்திற்கு மட்டக்களப்பில் கடமையாற்றி வந்த காரியாதிகாரி திரு. வி. நந்தபிள்ளை பொறுப்பேற்றுள்ளார்.

# தீவுப்பகுதி கி. ச. தேர்தல்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

பதினைந்து வட்டாரங்களைக் கொண்ட நெடுந்தீவு கிராமசபையின் பொதுத்தேர்தலின் அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்களை யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி திரு. ரி. எஸ். துரையப்பா சென்ற 27-ந் திகதி ஏற்றுக்கொண்டார். 15 வட்டாரங்களில் 56 பேர் போட்டியிடுகிறார்கள். இரு பெண்மணிகளும், தேர்தலில் கலந்துகொள்கின்றனர். தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ், இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் இத்தேர்தலில் பங்குபற்றுகின்றனர் போட்டி விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்

திருவாளர்கள் க. ஐயாக்குட்டி (தராசு), நா. சோமலிங்கம் (கண்), செ. நாகநாதி (விளக்கு).

2-ம் வட்டாரம்

திருவாளர்கள் ஐ. தாமோதரம்பிள்ளை (தராசு), க. கந்தவேலு (விளக்கு).

3-ம் வட்டாரம்

திருவாளர்கள் வே. பெருமையினார் (தராசு), கா. மருதலிங்கம் (சைக்கிள்).

4-ம் வட்டாரம்

திரு ஆ. குமாரசாமி (விளக்கு), திருமதி க. சேதுப்பிள்ளை (தராசு).

5-ம் வட்டாரம்

திருவாளர்கள் க. கதிரவேலு (விளக்கு), வே. கந்தையா (சேவல்), க. கோபாலசிங்கம் (சைக்கிள்), இ. கனகசபை (தராசு), மு. வேலுப்பிள்ளை (கப்பல்), மு. பசுபதிப்பிள்ளை (சூரியன்).

6-ம் வட்டாரம்

திருவாளர்கள் அ. மரியான் (விளக்கு), ச. மரியதாசன் (சைக்கிள்).

7-ம் வட்டாரம்

திருவாளர்கள் அ. அந்தோனிப்பிள்ளை (சைக்கிள்), தி. பற்றிக் (சூரியன்), அ. சவிரூற் (விளக்கு).

8-ம் வட்டாரம்

திருவாளர்கள் ம. மரியசீலன் (சைக்கிள்), தொ. மரியான் (விளக்கு), சூ. ஜெமமன் (கப்பல்).

9-ம் வட்டாரம்

திருவாளர்கள் ச. சுப்பிரமணியம் (சேவல்), ப. முருகேசு (தராசு), சி. கந்தையா (சைக்கிள்), ஓ. மரியான் (கப்பல்).

10-ம் வட்டாரம்

திருவாளர்கள் நா. கணபதிப்பிள்ளை (தராசு), சீ. பேதுருப்பிள்ளை (கப்பல்), வி. கதிரவேலு (சேவல்), வே. தருமலிங்கம் (சைக்கிள்), ஞா. யோசேபபு (விளக்கு), திருமதி சு. சொர்ணம்பிகை (சூரியன்).

11-ம் வட்டாரம்

திருவாளர்கள் சு. இராயப்பு (தராசு), வி. நடராசா (சைக்கிள்), ம. எட்வேட் (விளக்கு), செ. சைமன் (கப்பல்).

12-ம் வட்டாரம்

திருவாளர்கள் ம. கணபதிப்பிள்ளை (சூரியன்), ம. சின்னத்துரை (மூக்குக் கண்ணாடி), இ. நாகேந்திரர் (சைக்கிள்), இ. கனகசபை (பஸ்), அ. இளையதம்பி (தராசு).

13-ம் வட்டாரம்

திருவாளர்கள் நா. சுவாமிநாதர் (சைக்கிள்), க. சதாசிவம் (கப்பல்), கா. நாகலிங்கம் (தராசு), வி. சுப்பிரமணியம் (சூரியன்), க. மயில்வாகனம் (சேவல்), சு. வேலாயுதம் (விளக்கு).

14-ம் வட்டாரம்

திருவாளர்கள் வ. செல்லப்பா (தராசு), வ. சந்தியாப்பிள்ளை (கப்பல்), சி. பொன்னையா (சைக்கிள்).

15-ம் வட்டாரம்

திருவாளர்கள் கு. தெய்வேந்திரம் (சைக்கிள்), வ. வேலுப்பிள்ளை (விளக்கு), சதாசிவம் (கப்பல்), நா. சதாசிவம் (சேவல்), சொ. பசுபதி (தராசு).

## நாரந்தனை

நாரந்தனை கிராமசபையின் தேர்தலுக்கான அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களை யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி திரு. ரி.எஸ் துரையப்பா நேற்று ஏற்றுக்கொண்டார். 13 வட்டாரங்களைக் கொண்ட இக் கிராமசபையின் 11 வட்டாரங்களில் 27 பேர் போட்டியிடுகிறார்கள். கட்சி அடிப்படையில் எவரும் நியமிக்கப்படவில்லை. தமிழரசு—தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பல வட்டாரங்களில் கலந்து கொள்ளுகின்றனர். இரண்டாம் வட்டாரத்தில் இடதுசாரி ஐக்கியமுன்னணி ஆதரவாளர் ஒருவர் போட்டியிடுகிறார். தற்போதைய அங்கத்தவர்களில் ஐவர் போட்டியிடாது விலகிக்கொண்டனர். திரு க. அருணம்பலம், திரு. கு. வைரமுத்து, திரு. வே. நாகராசா, திரு. ம கந்தையா, திரு அ. தாவீது ஆகியோர் விலகிக்கொண்ட அங்கத்தவர்களாவர். பிரபல வழக்கறிஞர் திரு. என். ரி. சிவஞானம் 8-ம் வட்டாரத்திற்கும், திரு. கி குருசாமி 3-ம் வட்டாரத்திற்கும் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்கள். திரு. குருசாமி கடந்த 15 வருடங்களாகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். போட்டி விபரம் பின்வருமாறு—

1-ம் வட்டாரம்

திருவாளர்கள் வேலுப்பிள்ளை இராலசயா (சூரியன்), கந்தையா குமாரசாமி (சைக்கிள்) இராமலிங்கம் நகுலேச பிள்ளை (சேவல்).

2-ம் வட்டாரம்

திருவாளர்கள் விசுவநாதர் சேதுகாவலர் (தராசு), சின்னவன் ஐயன் (சைக்கிள்)

3-ம் வட்டாரம்

திரு. சின்னையா குமாரசாமி போட்டியில்லை (தற்போதைய அங்கத்தவர் புளியங்கூடல்)

4-ம் வட்டாரம்

திருவாளர்கள் வேலுப்பிள்ளை சதாசிவம் (தற்போதைய அங்கத்தவர்), (தராசு), சுப்பையா கந்தையா (சைக்கிள்).

5-ம் வட்டாரம்

திருவாளர்கள் இளையதம்பி பொன்னுச்சாமி (தற்போதைய அங்கத்தவர், சைக்கிள்), கந்தையா பொன்னுத்துரை (சூரியன்).

6-ம் வட்டாரம்

திருவாளர்கள் செபஸ்தியாம்பிள்ளை, பேதுருப்பிள்ளை தம்பிராசா (தற்போதைய அங்கத்தவர், ரேடியோ) கதிர்காமர் மார்க்கண்டு (சைக்கிள்)

7-ம் வட்டாரம்

திருவாளர்கள் அந்தோனிப்பிள்ளை போல் (சைக்கிள்), யோகம்பிள்ளை அல்பேட் எட்வேட் (தராசு).

8-ம் வட்டாரம்

திரு நாகலிங்கம் தம்பையா சிவஞானம் (வழக்கறிஞர்) போட்டியில்லை.

9-ம் வட்டாரம்

திருவாளர்கள் சுப்பையா பொன்னம்பலம் (சைக்கிள்), சவரிமுத்து அருமைநாதன் (தற்போதைய அங்கத்தவர், சேவல்).

10-ம் வட்டாரம்

திருவாளர்கள் சுப்பையா கதிரித்தம்பி (தற்போதைய தலைவர், தராசு) விசுவலிங்கம் தியாகராசா (விளக்கு), சிங்காராயர் யேக்கப் (சைக்கிள்)

11-ம் வட்டாரம்

திருவாளர்கள் சுந்தரம் (தராசு), சவிரிமுத்து நீக்கிலஸ் (தற்போதைய அங்கத்தவர் சூரியன்)

12-ம் வட்டாரம்

திருவாளர்கள் முத்துக்குமாரு இராசையா (சூரியன்), சுவாம்பிள்ளை நல்லதம்பி (தராசு) வல்லிபுரம் கோபாலகிருஷ்ணன் (விளக்கு), கோபாலாம்பிள்ளை ஆனந்தவேல (சைக்கிள்)

13-ம் வட்டாரம்

திருவாளர்கள் பிரான்சிஸ் விசுவாசம் (சேவல்), பொன்னையா கனகரத்தினம் (சைக்கிள்), சுப்பையா செல்லத்துரை (தராசு) (தற்போதைய அங்கத்தவர்).

# வடமராட்சி மாணவர் பேச்சுப்போட்டி முடிவு

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சி ஆசிரியர்சங்கத்தால் தம்பசட்டி இந்து மகளிர் கல்லூரியில் நடாத்தப்பெற்ற தமிழ்-ஆங்கில பேச்சுப்போட்டி முடிவுகள் வருமாறு:-

**தமிழ்ப்பேச்சு**

மேற்பிரிவு ஆண்கள்: நா. சண்முகநாதன் (நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயம்), கே. சண்முகநாதன் (சிதம்பராக் கல்லூரி), எஸ். சிவராஜசிங்கம் (விக்னேஸ்வராக்கல்லூரி)

மே. பி. பெண்கள்: இ. தேவமனோகரி (உடுப்பிட்டி மகளிர்), க. இந்திராணி (நெல்லியடி ம. ம. வித்தியாலயம்), சி. பானுமதி (மெதடிஸ்த பெண்கள்.)

மத்திய பிரிவு ஆண்கள்: சி. ஜெயசீலம் (அமெரிக்கமிஷன்), பி. ஆர். மனுவேல்பிள்ளை (ஹாட்லி), த. சிவநாதன் (அமெரிக்க மிஷன்).

ம. பி. பெண்கள்: எஸ். பாலாம்பிகை (நெல்லியடி ம. ம. வித்தியாலயம்), ச. விஜயலட்சுமி (உடுப்பிட்டி மகளிர்), தா. நீலாம்பிகை (நெல்லியடி ம. ம. வித்தியாலயம்.)

கீழ்ப்பிரிவு ஆண்கள்: கி. குலசேகரம் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) பி. பாலசுப்பிரமணியம் (ஹாட்லி), நாமணிவரன் (நெல்லியடி ம. ம. வித்தியாலயம்).

கீ பி. பெண்கள்: த. நிர்மலாதேவி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), த. விமலாதேவி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி). தா. கனகாம்பிகை (நெல்லியடி ம. ம. வித்தியாலயம்.)

**ஆங்கிலப் பேச்சுப் போட்டி முடிவுகள்**

மேற்பிரிவு ஆண்கள்: ஜே. தம்பாபிள்ளை (ஹாட்லி) பி. சிறீரஞ்சன் (ஹாட்லி) ஆர். முத்துரதிஞநந்தன் (அமெரிக்க மிஷன் கல்லூரி)

மே. பி. பெண்கள்: ரி. ஜெயநாயகி (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பருத்தித்துறை) ஜி குணரூபிணி (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி) ரி. தெய்வீக புஷ்பம் (வட இந்து மகளிர்.)

மத்தியபிரிவு ஆண்கள்: எம். ஆனந்தசயனம் (ஹாட்லி), இ. ராமராஜ் ஹாட்லி), எஸ்.சாந்திகுமார் (ஹாட்லி.)

ம. பி. பெண்கள்: பி. சாந்தகுமாரி (வட இந்து மகளிர்), உஷா. அபிஹான் (உடுப்பிட்டி மகளிர்), என். கருணாதேவி (அமெரிக்கமிஷன்)

கீழ்ப்பிரிவு ஆண்கள்: எம். ஜெயராஜ் (வட இந்துமகளிர்), பி. பாலசுப்பிரமணியம் (ஹாட்லி), ரி. தம்பாபிள்ளை (ஹாட்லி)

கீ பி. பெண்கள்: பி. மோகினி (வட இந்துமகளிர்), ஏ. சிவேந்திராணி (மெதடிஸத் பெண்கள் கல்லூரி), ஆர். ரஞ்சனி (மெதடிஸட்பெண்கள் கல்லூரி)


நிறுத்துங்கள்!




தரம் குறைந்த மைகளினால் உங்கள் பேனையை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்க் பாவியுங்கள். இதில் பேனையைப் பாதுகாக்கும் சொல்வ் X உண்டு. சுப்பர் குயிங்க் புதிய பேனைகளைப் புத்துணர்ச்சியுடனும், பழைய பேனைகளை புதிய பேனைகளைப் போல மீண்டும் எழுதவும் உதவி செய்கின்றது.

இது ஒரு
பாக்கர் பேனை
கம்பனியின் உற்பத்தி

உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.


# சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனை-சரவணை ஸ்ரீ முருகன் சனசமூகநிலையத்தின் வருடாந்தக் கூட்டம் நேற்று திரு. வே. இராசையா தலைமையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:- திரு. இ. நகுலேசபிள்ளை. உப தலைவர்:. திரு. க. குமாரசாமி. காரியதரிசி:- திரு. நா. கருணானந்தசிவம் உப காரியதரிசி:- திரு. க. சிவயோகநாதன் தனாதிகாரி:- திரு. து. சிவஞானம். நிர்வாக சபையொன்றும அமைக்கப்பட்டது.


"COMMERCIAL ACADEMY"

Closses will be conducted for London and Local Examinations.

Time:- DAY & NIGHT

P. S: Rapid Course for Commercial Training

Contact: REGISTRAR,
2nd Floor,
166, Hospital Road,
Jaffna.

109



கோயில் தேவைகளுக்கும், விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

அபிஷேக சந்தனம்

கோயில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்,
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

விளைவு சூடம்

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்
(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# வடஇலங்கை ஆசிரியர் சங்கப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

வடஇலங்கை ஆசிரியர் சங்க கல்விக்குழுவினல் நடாத்தப்பட்ட பேச்சு, இசை, கட்டுரைப்போட்டிகள் வடஇலங்கையிலுள்ள பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ். மேற்கு பகுதி பாடசாலைகள் ஆகியனவற்றுக்கிடையேயான போட்டி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்றது போட்டியில் அனேக பிள்ளைகள் பங்கு பற்றினர். போட்டி முடிவுகள் பின்வருமாறு:

**தமிழ் பேச்சுப் போட்டி**

கீழ்பபிரிவு: (ஆண்) கே. சரவணபவன் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி), எஸ். சிவராசா (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி), எ. வைரவமூர்த்தி (விக்டோறியாக்கல்லூரி).

கீழ்ப்பிரிவு: (பெண்) ஆர். உமாராணி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), மு. சகுந்தலா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), எஸ். மகேஸ்வரி (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி).

மத்தியபிரிவு: (ஆண்) என். சிறிகாந்தா (காரைநகர் இந்துக்கல்லூரி). எஸ். பரமானந்தம் (நயினதீவு மகாவித்தியாலயம்), பி. கனகநாயகம் (வட்டுக்கோடை இந்துக்கல்லூரி)

மத்தியபிரிவு: (பெண்) கா. கீர்த்திராணி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), சி. யோகேஸ்வரி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), கி. நாகேஸ்வரி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) த. மணிமேகலாதேவி (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி).

மத்தியபிரிவு: (ஆண்) வி. விசயரத்தினம் (காரைநகர் இந்துக்கல்லூரி), என் இராசேந்திரன் (காரைநகர் இந்துக்கல்லூரி), எ. சோர்ணலிங்கம் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி).

மத்தியபிரிவு: (பெண்) எஸ். விஜயலட்சுமி (பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி), ஆர். நவரஞ்சனி (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆர். நாகேஸ்வரி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), என். மேரி போப் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

மேற்பிரிவு: (ஆண்) வி, கனகசுந்தரம் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி), எஸ். பத்மநாதன் (விக்டோறியாக்கல்லூரி), கே. தில்லையம்பலம் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி).

மேற்பிரிவு: (பெண்) பி அஞ்சல் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ஆர். சாந்தினி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ஆர். ஞானசோதி (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி), ஆர் சுசிலா (பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி).

மேற்பிரிவு: (ஆண்) எஸ். பத்மநாதன் (விக்டோறியாக் கல்லூரி), பி. கைலாயநாதன் (நயினதீவு மகாவித்தியாலயம்). த. கெங்காதரன் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி).

மேற்பிரிவு: (பெண்) சி. சிவலோகநாயகி (பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி), ந. தேவமணி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி). கே. தவமணிதேவி (விக்டோறியாக் கல்லூரி).

**ஆங்கிலப் பேச்சுப் போட்டி**

கீழ்ப்பிரிவு: (ஆண்) எஸ். சுகுமார் (யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ். மித்திரன் (யாழ்ப்பாணக்கல்லூரி), பி. கருணைநாதன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

கீழ்ப்பிரிவு: (பெண்) ஆர். நிர்மலா (யாழ்ப்பாணக்கல்லூரி), ஆர். சாந்தகுமாரி (யாழ்ப்பாணக்கல்லூரி), ஆர். றதாசனி (யாழ்பபாணக்கல்லூரி).

**இசைப்போட்டி**

**கூட்டாகப் பாடல்**

கீழ்ப்பிரிவு: (பெண்) பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி, காரைநகர் இந்துக்கல்லூரி.

மேற்பிரிவு: (பெண்) பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, காரைநகர் இந்துக்கல்லூரி

கீழ்ப்பிரிவு: காரைநகர் இந்துக்கல்லூரி.

**தனிப்பாடல் போட்டி**

கீழ்ப்பிரிவு: (பெண்) எ இந்திராதேவி (காரைநகர் இந்துக்கல்லூரி), எம். விஜயலட்சமி (காரைநகர் இந்துக்கல்லூரி).

மேற்பிரிவு: (பெண்) த. அரியமலர் (காரைநகர் இந்துக்கல்லூரி).


**யாழ்ப்பாண மாநகரசபை**

**பெண் பரிசரர்**

**(அற்றென்டென்ற்) பதவி**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாநகரசபைஆணையாளரால் கோரப்படுகின்றன.

2. சம்பளம்:- இப்பதவிக்கான சம்பளம் வருடத்திற்கு ரூபா 600 — 20 X 12 — ரூபா 840/-.

3. (அ) வயது:- 1-5-64 -ம் திகதியன்று 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) தமிழில் குறைந்தது 7-ம் வகுப்பு சித்தியடைந்தவராக இருத்தல்வேண்டும். ஆங்கில அறிவு உள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

(இ) விண்ணப்பதாரர்கள், தங்களது அனுபவம் பற்றியும், குணநலம் பற்றியும் சமீப காலத்திய இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(ஈ) விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றும் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் (இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்குதனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது) என்ற முகவரிக்கு 16-3-64-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும். அதன பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

டி. டி. ஜயசிங்க,
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
4-3-64. 111



**முல்லா பீடி**

கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு அக்கூள் புகையிலையினல் தயாரிக்கப்பட்ட காரம், மணம், குணம் நிறைந்த முல்லா பீடியைப் பாவியுங்கள். முல்லா பீடி வட-கீழ் மாகாணங்கள் எங்கும் கிடைக்கும். முல்லா பீடி என்று கேட்டு வாங்க மறந்துவிடாதீர்கள். 110



**தேவை**

ஆஸ்பத்திரி துணிகள் கழுவுவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விதாரர்கள் பிணை கட்ட ஆயத்தமாக இருக்கவேண்டும். ஒரு துண்டு கழுவுவதற்குரிய தொகையைக் குறிப்பிட்டு,காரியதரிசி, கூட்டுறவு ஆஸபத்திரி, மூளாய் என்ற விலாசத்திற்கு 15-3-64-க்கு முன்னர் விண்ணபிக்கவும். 108


# தற்காலிக அங்கத்தவர்

கொழும்பு, சனி

அரசாங்க பொதுச் சேவைக் கமிஷனின் தற்காலிக அங்கத்தவராக டாக்டர் ஆர். எல். புராகியரை கவர்னர் ஜெனரல் நேற்று நியமித்துள்ளார்.

மேற்படி கமிஷனின் அங்கத்தவரான ஜனப ஏ. எம். ஏ. அஸீஸ் வெளியூர் செல்வதால் அப்பதவிக்கு இவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.


வருஷ டிபொசிட் வட்டி

8%

சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்



**வரி விளம்பரம்**

**To Let**

Large room suitable for office, business premises, Stores etc. Apply 11. Momsac building, Stanley Road, Jaffna 22

**Ranjanadevi Vidiyalayam**

(Approved School)

244, Navalar Road, Jaffna.

Vacancies in:-

G. C. E. (Arts, Science), Home Science Diploma, Commercial, Radio Engineering.

Apply: R.J. Pararajasingham, B. A, Diploma, Co-principal. 27

**தேவை**

மலசலகூடத் தொழிலாளர்கள் தேவை. 15-3-64-க்கு முன்னர் காரியதரிசி, கூட்டுறவு ஆஸ்பத்திரி,மூளாய் என்ற விலாசத்திற்கு நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளுடன் மட்டும் விண்ணப்பிக்கவும். 21

**விற்பனைக்கு வீடும் வளவும்**

626/10, தலையாளி ஒழுங்கை, நாச்சிமார் கோவிலடி, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்திலுள்ள 6 பரப்பு நிலமும் வீடும் விற்பனைக்கு உண்டு விரும்புபவர்கள் ச. பொன்னையா, ஆசிரியர், சங்கத்தானை, சாவகச்சேரி என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 23

அளவெட்டி தடுகபை (இருல்மடத்தடி) யில் 9—10 பரபபுக்காணிவிற்பனைக்குண்டு. தேவையானோர் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். மே/பா. லிங்கவாசம், அளவெட்டி. 24

யாழ்ப்பாணம் மண்டைதீவில் பிரதான இடத்தில்வான்பயிர், செய்பயிர், கிணறு வசதியுடன் 50 பரப்பு குடியிருப்புக் காணி முழுதும் அல்லது பிரித்தும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பரதாரர், C/o 'ஈழநாடு'. 26


# சைவமங்கையர் கழகத்துக்கு அதிக வெற்றி

கொழும்பு, ஞாயிறு

அண்மையில் இடம்பெற்ற போட்டிகளில் சைவமங்கையர் கழக மாணவிகள் அதிக வெற்றியைப பெற்றுள்ளார்கள்.

ராமகிருஷ்ணமிஷனல் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் சைவமங்கையர்கழகத்தைச் சேர்ந்த செல்வி சிறீகாந்தி சுப்ரமணியம், மத்திய பிரிவில் தங்கப்பரிசு பெற்றுர். செல்வி சிறிரமணி கனகசபை சிரேஷ்டபிரிவில் மூன்ருவது இடத்தைப் பெற்ருர்.

1963-ம் ஆண்டு மார்கழி மாதம் மேற்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட 5-ம் வகுப்பு பரீட்சையில் சைவமங்கையர் கழகத்தைச் சேர்ந்த செல்வி நளாயினி பரமலிங்கம், முதலாவது இடத்தை பெற்று தங்கப் பதக்கம் பெற்ருர். செல்வி மல்லிகாதேவி இந்திராணி இரண்டாவது இடத்தைப் பெற்ருர். 1962-ம் ஆண்டு மார்கழியில் நடைபெற்ற 5-ம் வகுப்பு பரீட்சையில் செல்வி சாந்தி மகாதேவா இரண்டாம் இடத்தைப் பெற்ருர்.

# "சோஷலிஸ வளர்ச்சியை இறக்குமதியாளர் தடுக்கின்றனர்"

## சுன்னுகம் கூ. மொ. வி. திறப்புவிழாவில் திரு. தேசப்பிரியா

நல்லூர், திங்கள்

இலங்கையில்சோஷலிஸச மதர்ம அரசாட்சி ஏற்படுத்துவதனை தடுக்கும்வகையில்இந்நாட்டில் இறக்குமதி வர்த்தகர்கள் நடந்து வருவதாகவும் இந்த நிலையைத் தொடர்ந்து நீடிக்க விடாமல் இந்த நாட்டைப் பாதுகாக்கவே கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் செயல்பட்டு வருவதாகவும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத் தலைவர் திரு. தேசப்பிரியா சேனநாயக்கா சுன்னுகத்தில் கிளை ஸ்தாபனமொன்றினைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

சுன்னுகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் திரு. தேசப்பிரியா சேனநாயகா கூறியதாவது:

"பொதுஜன விரோதிகளும் பிற்போக்காளர்களும் சேர்ந்து விலைவாசிகள் உயர்ச்சி அடையக் காரணமாக இருக்கின்றனர். இவர்கள் இந்த நாட்டில் சமதர்ம ஆட்சி நிலவுவதனைத் தகர்க்கச் சதி செய்கிறார்கள். விலைவாசிகள் உயர்வு பற்றி மக்களுக்குத் தவறான முறையில் எடுத்துச் சொல்லி சோஷலிஸ ஆட்சி ஏற்படாமல் முயற்சித்து வருகிறார்கள். விலைவாசிகள் ஏற்றத்தைத் தடுத்து இந்நாட்டிலுள்ள ஏழை மக்கள் குறைந்த விலையில் பொருள்களை வாங்க வசதி செய்யும் வகையில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

இந்த நாட்டில் அந்நிய இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்ய வர்த்தக நிலையங்கள் முன்வர வேண்டும்.

மூன்றுண்டு கால வளர்ச்சியில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் பெரும் சாதனையைச் செய்துள்ளது. டவை இறக்குமதியில் 20 வீதத்தை கடந்த ஆண்டில் பொறுப்பேற்ற இந்த ஸ்தாபனம் இவ்வாண்டு 50 வீதம் இறக்குமதி செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது. இந்நாட்டிலுள்ள சுமார் 30 ஆயிரம் சில்லறை வியாபாரிகள் இந்த ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டு குறைந்த விலையில் மக்களுக்கு பொருள்களை விற்பனை செய்ய முன்வரவேண்டும்.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் இறக்குமதியில் அடையும் இலாபங்கள் ஏராளமான தொகை. இவற்றை அரசாங்கம் இந்த நாட்டின் பொருளதார அபிவிருத்திகளைச் செலவிடலாம். அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி ஆலைகள் அமைக்கலாம்.

பெட்ரோல் விற்பனையை அரசாங்கம் பொறுப் பேற்றகும் ஏகாதிபத்திய வாதிகள் செய்த மிரட்டல்கள் பல. இன்ஞரன்ஸ அரசாங்கத்தினல் பொறுப்பேற்கப் பட்டது. அந்நிய ஏக போகப்பிடிப்பு தகர்க்கப்பட்டது. மக்களைச் சுரண்டும் வட்டிக்காரரிடமிருந்து அவர்களை மக்கள் வங்கி காப்பாற்றுகிறது.

இலங்கை சோஷலிஸப் பாதையில் வெகுதுரிதமாக முன்னேறுகிறது என்பதற்கு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் ஒருமைல்கல்லாகும்.

கூட்டுறவு நிலையங்களில் உள்ள சில ஊழியர்களின் தவருன நடத்தைக்கு அவர்கள் சரியான முறையில் தண்டிக்கப் படுவார்கள். தன்னலமற்ற ஊழியர்கள் பலரினல்தான் கூட்டுறவு இயக்கம் நிலை பெற்றுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன ஊழியர்கள் மக்களின் ஊழியர்கள் என்பதனை அவர்கள் மறந்து விடக்கூடாது.

நீலமும் சிகப்பும் அமைந்த அரசியல் நிறுவனங்களால் தான் இலங்கை சுபீட்சப் பாதையில் முன்னேறும்".

திறப்பு விழா வைபவத்திற்கு தலைமை வகித்த சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தமது தலைமையுரையில் மக்களின் வறுமையைப் போக்க அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளில் ஒன்றுதான் கூ. மொ. வி. ஸ்தாபனம் என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை, திருவாளர்கள் வி. பொன்னம்பலம், எஸ ஆர். ஜேக்கப், கு. அம்பலவாணர் ஆகியோரும் பேசினர். திரு தியாகராஜா நன்றி கூறினர்.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத் தலைவர் திரு. தேசப்பிரிய சேனநாயகா, யாழ்ப்பாணம் எம். பி. திரு அல்பிரட்துரையப்பா, பட்டின சபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் ஆகியோர் சுன்னுகம் சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப் பட்டனர்.

---

கிரிக்கெட்

## மானிப்பாய் இந்து. வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு

மானிப்பாய் இந்துக்கல்லூரிக் கோஷ்டிக்கும் நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலய கோஷ்டிக்குமிடையே மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கோஷ்டியினர் தமது முதலாவது இன்னிங்சில் 105 ரன்களையும் நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலய கோஷ்டியினர் 63 ரன்களையும் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்சில் மானிப்பாய் இந்துக்கல்லூரி தனது 7 விக்கெட் நஷ்டத்திற்கு 93 ரன்கள் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தனது இரண்டாவது இன்னிங்சில் 88 ரன்கள் மாத்திரம்பெற்றது. எனவே மானிப்பாய் இந்துக்கல்லூரி 97 ரன்களால் வெற்றியீட்டியது.

---

## பளையில் பயிர்ச் செய்கைக் குழு

பளை, ஞாயிறு

கடந்த பல ஆண்டுகளாக இப்பகுதி விவசாயிகள் பயிர்ச் செய்கைக்குழு இல்லாததன் காரணமாக மிகக் கஷ்டமடைந்துவந்தனர். இக்கவலையைத் தீர்த்துவைக்குமுகமாக கடந்த புதன்கிழமை காலை புலோப்பளை கிராமசபைக் கட்டிடத்தில் இப்பகுதி விவசாயிகளினல் ஓர்கூட்டம்கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு வண்ஞன்கேணியைச் சேர்ந்த சண்முகம் சின்னத்துரை தலைவராகவும் இத்தாவிலைச் சேர்ந்த தம்பையா ஆறுமுகம் காரியதரிசியாகவும், பளை இராமு தாமோதரம்பிள்ளை தனதிகாரியாகவும் தெரிவுசெய்யபபட்டனர். இக்கூட்டத்தில் தனதிகாரி குழுவின் சார்பில் பணம் பெறுவதற்கும் செலவு செய்வதற்கும் குழுவினர் சம்மதம் நிறைவறியது. அடுத்த கூட்டம், பளை பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தில் 11-3-64ல் கூடும் என அறிவிக்கப்பட்டது.

---

## [illegible]யர் இடமாற்றம்

பளை, ஞாயிறு

திருக்கோணமலையில் கடமை ஆற்றி வந்த திரு. ஏ. ஸ்ரீஸ்கந்தராஜா பளை மகாவித்தியாலயத்திற்கு உதவி ஆசிரியராக மாற்றப்பட்டுள்ளார். பளை மகாவித்தியாலயத்தில் கடமை ஆற்றி வந்த செல்வி இராசேஸ்வரி கந்தையா, உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திற்கு உதவியாசிரியராக மாற்றப்பட்டுள்ளார்.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதை விளக்கத் தேவையில்லை கஷ்டத்தை வெளியில் சொல்ல முடியாமல், பலர் சங்கடப்படுகிறார்கள். இவர்களது கஷ்டத்தை உணர்ந்து, சில சைவ மக்கள் அனுதாபத்துடன் இவர்களுக்குப்பரிந்து அம்மகாநாட்டிலேயே பேசியதாகக் கேள்விப்பட்டேன்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. தங்கள் கஷ்டங்களையும் தேவைகளையும் சைவ குருமார்கள் ஒன்றுபட்டு கட்டுபபாடாக எடுத்துக்கூற முன்வந்ததே நல்ல அறிகுறி. இத்துடன் அவர்கள் தங்கள் குறைகளையும் திருத்திக்கொண்டால் அவர்களுக்கும் சைவ சமூகத்துக்கும் மி. நல்ல எதிர்காலம் காத்திருக்கின்றது.

* * *

நாவலர் இளம் விவசாயிகள் சமூகத்தார் சென்ற சனிக்கிழமை தங்கள் 7 வது ஆண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். ஒரு சாதாரண கம்பாவிட்டராக வேலை பார்த்த சித்திரவேலு என்பவர், பக்கவாத்தியங்களுடன் மிக இனிமையாகக் கச்சேரி செய்தார் நல்லூர்க்கந்தன் மீது அன்பர் வீரமணி இயற்றியுள்ள அருமையான கீர்த்தனங்கள் செவிக்கும் உள்ளத்துக்கும் விருந்தாக இருந்தன. முருகன் கருணையால், சித்திரவேலு இப்போது ஒரு 'குட்டி முதலாளி' ஆகியுள்ளாராம்!

இன்று திங்கட்கிழமைதான் முதல் முதலாக, இக்கழகத்தார், பரந்தனுக்கு அப்பால் சய்துள்ள நெல் சாகுபடியை அறுவடை செய்கிறார்களாம்.

குடாநாட்டை விட்டு துணிச்சலுடன் நம் வாலிபர்கள் அதிகமாக வெளிச் சென்று குடியேறி அங்கு கமம் முதலியன செய்யவேண்டுமென்றும், இதற்கு இக்கழகத்தினர் மேலான முன்மாதிரியாக இருப்பதாயும், தீவுப்பகுதி எம். பி. யான நவரத்தினம் இவ்விழாவில் கூறி, இக்கழகத்தினரின் சாதனைகளை நன்கு பாராட்டினர்.

* * *

பொன்னேபோல் திருமேனியுடையான் தன்னைப் பொங்கு வெண்நூலனைப் புனிதன் தன்னை, மின்னனை மின்னிடையாள் பாகன் தன்னை வேழத்தினுரி விரும்பிப் போர்த்தான் தனைத், தன்னைத் தன் னெப்பாரில்லாதானைத் தத்துவனை யுத்தமனைத் தழல் போல் மேனி, அன்னனை ஆருரிலம்மான் தன்னையறியாதடி நாயேனயத்தவாறே.

— திருநாவுக்கரசர்

---

## சமூக சேவா சங்கம்

உடுப்பிட்டி, வியாழன்

விடத்தற்பளை, ஸ்ரீ கணேசானந்த சமூகசேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. மு. இளையதம்பியின் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. த. முருகேசபிள்ளை, உபதலைவர்: திரு. மு. சிவப்பிரகாசம்; காரியதரிசி: திரு. இ. நடராஜலிங்கம்; உபகாரியதரிசி: திரு. மு. சிவப்பிரகாசம்; தனதிகாரி: திரு. க. செல்வத்துரை.

---

# இளம் விவசாயிகள் கழக ஏழாவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணம் நாவலர் இளம் விவசாயிகள் சமூக 7-வது ஆண்டுவிழாசனிக்கிழமை மாலை குளங்கரைப் பாடசாலையில் நடைபெற்றது. பிரதம பேச்சாளராக திரு கே. பி. ஹரன் பங்கு பற்றினர். அவர் பேசுகையில் கூறியதாவது:-

"படிக்காதமக்கள்தான் விவசாயம் செய்கிறார்கள் என்று எண்ணிய காலத்தை மாற்றி படித்த வாலிபர்களாலும் விவ செய்ய முடியும் என்பதை நிரூபிபதற்கு இக்கழகம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. உத்தியோக வாலிபருக்கு தான் பெண் கொடுப்போம் என்று கூறிய தாய்மார் இனிமேல் படித்த இளம் விவசாயிக்கு பெண்ணைக் கொடுக்க முன்வரல் வேண்டும் மேலும் இக்கழகத்தில் ஜாதி மத வேறுபாடின்றி பலரும் சேர்ந்திருக்கிறார்கள். நாவலர் பெருமான் பெயரால் ஆரம்பித்த இக்கழகம், அவர்போதனைகளைப் பின் பற்றி வழ வேண்டும்" என்று வாழ்த்துகின்றேன்."

கைத்தொழிலினல் எமது நாடு அதிக முன்னேற்றமடைய முடியும் என்று திருமதி திலெத்மாவதி பேசுகையில்கூறினர்.

தீவுப்பகுதி எம். பி. திரு வி. நவரத்தினம் பேசியதாவது:-

தமிழ் வாலிபர்கள் கல்வி பயின்றிருந்தாலும் இனி அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்குமோ என்பது சந்தேகமே. எனவே தமது சொந்த முயற்சியில் விவசாயம் போன்ற துறைகளில் ஈடுபட்டு முன்னேற்றமடைய முயற்சிக்க வேண்டும்.

குடியேற்றக் காணிகள் கொடுக்கப்படும் போது அங்கு சென்று குடியேறுவற்கு நாம் தயாராக வேண்டும் ஒரே இடத்தில் இருந்து விடாது வெளியிடங்களில் செல்வதால் நமக்கு வேலை வாய்புகள் கிட்டும்.

சென்ற வருடம் முதல் தேர்தல் தொகுதி பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இதில் படித்த இளம் விவசாயிகள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்து வருகிறார்கள். இதை மற்றைய இளைஞர்களும் பின்பற்ற வேண்டும்.

ஈற்றில் கழக அங்கத்தவர்களின் "போனல் போ" நாடகமும், கலைவாணர் நாடக மன்றத்தின் "நல்லதும் கெட்டதும்" நாடகமும் நடைபெற்றன. திரு. கே. சித்திரவேல் அவர்களின் இன்னிசையும் நடைபெற்றது.

---

## பாக். மாணவ கோஷ்டி இங்கு வந்தது

கொழும்பு, ஞாயிறு

8 மாணவிகளும், பேராசிரியர்களும் உள்பட 18 மாணவர்களைக் கொண்ட நல்லெண்ணத் தூதுகோஷ்டியொன்று,பாகிஸ்தானிலிருந்து நேற்று கொழும்பு வந்துசேர்ந்தது. இக்கோஷ்டி கராச்சியிலுள்ள இஸ்லாமிய கல்லூரி பேராசிரியர் ஜி. எம். கான் தலைமையில் வந்து சேர்ந்தது.

---

## பிரிவுபசாரம்

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டிக் கிராமசபையின் உபதலைவரான திரு. மு. யோகலிங்கம், கிளிநொச்சிப் பகுதியின் திடீர் மரண விசாரணை அதிகாரியாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து உடுப்பிட்டிக் கிராமசபை அங்கத்தினர்களால் அவருக்கு ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடத்தப்பட்டது.

---

## சைவசமயத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமாகும்." என்று தலைமையுரையின்போது அவர் குறிப்பிட்டார்.

"நமதுசமயக் கொள்கைகளை யாம் கடைப்பிடித்தல் வேண்டும். சைவாலயங்களில் திருமுறைகளை நன்கு ஓதி பயன் பெற வேண்டும்" என்று சாம்பசிவக் குருக்கள் கூறினர். சைவக் குருமார் மகாநாட்டின் அவசியம்பற்றி பொன். கருணகரன் குறிப்பிட்டார்.

"ஆன்மாக்களுக்குப்பாசத்தை நீக்கி ஞானத்தைக் கொடுப்பவர் குரு. அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்கள் எந்த வருணத்தைச் சார்ந்தவர் ஆயினும் குருவாய்வரலாம்" என்று குருத்துவம் என்னும் பொருள் பற்றிப பேசிய பண்டிதர் திரு. இ. நவரத்தினக் குருக்கள் குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதம குருவாக இருந்து மறைந்த சோ வைரவநாதக் குருக்களினதும் சித்தாந்த சரபம் பனி ஈசானசிவாசாரியரினதும் ஆன்மசாந்தியின்பொருட்டு மௌனம் அனுட்டிக்கப்பட்டது.சிவஸ்ரீ.ஈசான சிவாச்சாரியார் இந்திய நாட்டின் சைவசித்தாந்தக்கண் போன்றவர் என்றும் நல்லூர் பிரதம குருவாக இருந்த வைரவநாதக் குருக்கள் கடவுட் பணியே தம்பணியென்று வாழ்ந்தவரென்றும் பிரதிட்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ கைலாசநாதக்குருக்கள் குறிப்பிட்டார்.

---

## பாட்டரி ஏற்றுமதியால் இலங்கைக்கு லாபம்

கொழும்பு, ஞாயிறு

பர்மாவிற்கு ஏற்றுமதி செய்யப்படு' எக்ஸைட் பாட்டரியினல், இலங்கை தனது அந்நிய செலாவணியை அதிகரித்துக்கொள்ளும் என்று ரங்கூனிலிருந்து திரும்பிய அரசாங்க வர்த்தகக் கோஷ்டியை சேர்ந்த திரு. ஜே. ஈ. ஆர். ஹென்ஸ்மன் தெரிவித்தார்.

ரூ. 4 லட்சம் பெறுமதியான பாட்டரிகளுக்கு ஓடர் செய்யப்பட்டதால், அந்நிய செலாவணி இலட்சத்து 50 ஆயிரம் ரூப' வாக அதிகரிக்குமென்றும் முதலாவது பகுதியாக அனுப்பப்பட்ட பட்டரிகள் ரங்கூனில் விரைவில் விற்பனை செய்யப்பட்டுவிட்டதென்றும், திரு ஹென்ஸ்மன் கூறினர்.

---

## மகாவிஷ்ணுமூர்த்தி

மாவிட்டபுரம், திங்கள்

இன்றுகாலை 6 மணிக்கு மகாலக்ஷ்மி, பூலக்ஷ்மிசமேதமகாவிஷ்ணுமூர்த்தி, மாவைகந்தசுவாமி கோவிலில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு எழுந்தருளச் செய்வார்.

---

## மரண அறிவித்தல்

க. மா. கதிரவேலுப்பிள்ளை

செல்லம்மாவின் அருமைக் கணவரும் க. மா. தம்பையா, டாக்டர் க. மா. தியாகராஜா ஆகியோரின் சகோதரருமான ஓய்வுபெற்ற கொஸ்லாந்தை ஓவர்ஸியர் க. மா. கதிரவேலுபபிள்ளை நேற்று காலமானர். அன்னரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு இல. 58, நல்லூர் குறுக்கு வீதியிலிருந்து செம்மணி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்க.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது